[22nd August 1960

SRI K. ANBAZHAGAN: இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை காரணமாக எல்லா 100 ரூபாய் நோட்டுகளையும் அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள நோட்டுகளை மட்டும் போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றி ரிசர்வ் பாங்கு கவனித்து செய்ய வேண்டியதை செய்து கொண்டு வருகிறது. அதைப்பற்றி அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி பின்னால் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

SRI J. MATHA GOWDER: எந்த எந்த நோட்டுக்கள் கள்ள நோட்டுகள் என்று தெரியாமல் எல்லா நோட்டுகளையும் கொண்டுபோய் கொடுக்க மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே திட்டவட்டமாக இந்த இந்த எண்ணிக்கையுள்ள நோட்டுகள் தான் கள்ள நோட்டுகள் என்பதைப் பற்றிய அறிக்கையை அரசாங்கம் வெளியிட முயற்சிக்குமா ?

THE HON. C. SUBRAMANIAM: கள்ள நோட்டுகள் என்ன என்பதற்கு அவற்றில் முத்திரை போட்டால்தான் தெரியும். என்னென்ன சாத்தியமோ அவையெல்லாவற்றையும் ரிசர்வ் பாங்கு செய்து கொண்டு தானிருக்கிறது. அதைப்பற்றி பின்னால் அறிக்கை விடப்போகிறேன்.

MR. SPEAKER: கனம் அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்டை கொடுக்கப் போகிறார் கூடிய சீக்கிரத்தில். அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.

Single Finger-Print system

* 370 *Q.*—SRI M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் தனிவிரல் பதிவு முறை (Single Finger-Print System) எந்த எந்த நகரங்களில் காவல் துறையினர் குற்ற ஆய்வுக்குப் பயன்படுத்துகின்றனர் ?

(ஆ) இந்த நவீன முறை எல்லா முக்கிய நகரங்களிலும் குறிப்பாக திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் எப்போது ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Single Digit System of Finger-Print is in force in the following two places :—

(1) Madras City since 15—6—1956.

(2) Madurai district since 16—5—1960.

(*b*) The question of extension of the Single Digit System of Finger-Print to other important towns will be considered after, and in the light of, the experience gained in the working of the system introduced in the Madurai district from 16th May 1960.

22nd August 1960]

SRI S. M. ANNAMALAI: இது வரையில் அந்தத் திட்டத்தினுல் நல்ல பலன் ஏற்படுகிறது என்று சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மேலும் அந்தத் திட்டத்தை ஏன் விஸ்தரிக்கக்கூடாது என்று கேட்க விரும்பு கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதை விஸ்தரிப் பதற்கு இடம், அந்த பிராந்தியத்தினுடைய தகுதி இவை வேண்டியதாக இருக்கிறது.

New Bus-stand for Cumbum

* 371 *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL (on behalf of Sri N. R. THIAGARAJAN): கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா கம்பம் பஸ் ஸ்டாண்ட் எடுக்கப்பட்டு எத்தனை வருடம் ஆகிறது?

(அ) புது பஸ் ஸ்டாண்ட் அமைப்பதில் உள்ள கால தாமதத்திற்குக் காரணம் என்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*) The bus-stand at Cumbum was closed on 4th September 1955.

(*b*) It is reported that the site proposed for the construction of the new bus-stand belongs to Sri Kambaraya Perumal Devasthanam and as such the Commissioner for Hindu Religious and Charitable Endowments has been approached for sanction and his orders in the matter are awaited.

SRIMATHI A. S. PONNAMMAL: அங்கே பஸ் ஸ்டாண்ட் அமைப்பதற்கு அந்த தேவஸ்தானத்தை இந்த அரசாங்கம் கேட்டதற்கு அவர்கள் கொடுக்காமல் இருந்ததற்குக் காரணம் என்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: 1957-ம் ஆண்டு கமிஷனரைக் கேட்டதற்கு 11—8—1958-ல் 15 வருஷங் களுக்கு மட்டும் தான் அந்த இடத்தை லீசுக்கு விட முடியும் என்று கோரி இருந்தார்கள். அந்த லீசும் அந்த 15 வருஷத் திற்குத் தான். வாடகை 100 ரூபாய் கொடுக்க வேண்டியதாக இருந்தது. அத்துடன் கட்டிடம் வேறு கட்ட வேண்டியதாக இருந்தது. அப்படி அமைத்து அதை உபயோகிப்பதாக இருந்தால் அது லாபகரமாக இருக்காது என்று கருதி 50, 60 வருஷ லீசில் விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக் கிறுர்கள்.

Tamarind

* 372 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்துக்கு எத்தனை டன் புளி இறக்குமதி செய்யப்படுகிறது?